//தனிக்கவனம்// //அவசரம்//

**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் அவர்களின்**

**செயல்முறைகள், சென்னை–6.**

**ந.க.எண். 000606/ FC /2022, நாள்.07.06.2022**

* * * * *

பொருள்:– பள்ளிக்கல்வி – வங்கிக் கணக்கு எண்கள் சரிபார்த்தல் – சார்பு.

பார்வை :– 1. இவ்வாணையரக நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண்.051310/PC to FC/2021, நாள். 27–09–2021, 04–10–2021, 13–10–2021, 18–11–2021 மற்றும் 20–11–2021.

2. இவ்வாணையரக நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண். 000606/ FC /2022, நாள் :–08–02–2022, 15–02–2022, 07–03–2022, 16–03–2022 மற்றும் 19–05–2022.

* * * * *

பார்வையில் காணும் கடிதத்திற்கு, தங்கள் அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட வங்கிக் கணக்குகள் சார்பான விவரங்களில், வங்கிக் கணக்கு எண்ணினை நிதித் துறை, தலைமைச் செயலகத்தில் Bank Master உடன் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது அவற்றில் 2411 வங்கிக் கணக்கு எண்கள் ஒத்திராமல் (Not Matching) இருந்துள்ளது. அவற்றினை Bank Pass Book உடன் ஒப்பிட்டுப் பார்த்து சரியான வங்கிக் கணக்கு எண்ணினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள "ACCOUNT NUMBER NOT MATCHED" என்ற Excel, Column "F"ல் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு Bank Pass Book உடன் ஒத்திருப்பின் வங்கிகளில் நேரில் சென்று சரிபார்த்து சரியான வங்கிக் கணக்கு எண்ணினை குறிப்பிடுதல் வேண்டும்.

இதனை கவனமாக பூர்த்தி செய்து, அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களும் சார்நிலை அலுவலகங்களிடமிருந்து இதனைப் பெற்று ஒருங்கிணைத்து (Consolidate) Excel Format–ல் இவ்வாணையரக நிதிக்கட்டுபாட்டு

அலுவலரின் மின்னஞ்சல் "dsefc@nic.in" முகவரிக்கு 17/06/2022 மாலை 5:00 மணிக்குள் அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

//இது மிகவும் அவசரம்//

இணைப்பு:-
Excel Format

நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்

பெறுநர்
1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து விவரங்களைப் பெற்று ஒருங்கிணைத்து 17/06/2022 மாலை 5:00 மணிக்குள் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது)
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
(அனைத்து அரசு/உதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பெற்று ஒருங்கிணைத்து முதன்மைக் கல்வி அலுவலகங்களுக்கு உடன் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது)